4

# வேட்கை

முழங்காலைப் பிடித்துக் கொண்டு படிகளில் ஏறிவந்த ராங்கையாக் கிழவன் கடைசிப்படியில் நின்று வாயால் ஊதிக் கொண்டான். பத்துப் பதினைந்து படிகள் அவன் ஏறியதில் அவனுடைய கிழட்டுக் கால்கள் 'வெட வெடவென்று நடுங்கின. தன் லயத்து வாசலை நோக்கி நடந்தவன் சூழ்நிலையில் ஒரு மாற்றம் தெரிவது உணர்ந்து நின்று நிதானித்துப் பார்த்தான்.

அவனுடைய வீட்டிலிருந்து மூன்று வீடுகள் தள்ளியிருக்கும் சிவசாமியின் வீட்டுக்குள்ளிருந்து ஒளி வெள்ளம் வெளியே பாய்ந்து கொண்டிருந்தது. அந்த லயத்தின் ஒன்பது வீடுகளிலும் சிணுங்கிக் கொண்டிருந்த லாந்தர் வெளிச்சத்திலும். சின்னப் போத்தல் விளக்குகளின் மங்கும் ஒளிக்கும் மத்தியில் அந்த ஒரு வீட்டு வெளிச்சம் மட்டும் வாசலை நோக்கி வைரச் சுடரை அள்ளி வீசிக்கொண்டிருந்தது.

ஒளியின் சக்தி மகத்தானது தான்.


கிழவன் விட்டிலாக அந்த வீட்டு வாசலில் போய் நின்று எட்டிப் பார்த்தான். உள்ளே அறையின் மேற் பகுதியில் ஓடும் பெரிய கம்பியில் ''பெட்ரோமாக்ஸ்'' லைட் ஒன்று 'உஸ்' என்று பலமாக இரைந்தவாறு தொங்கிக் கொண்டிருந்தது.

வாசலில் நின்றவாறே 'ஏலே செவசாமி....' என்று குரல் கொடுத்தான் கிழவன். ''யாரது?....'' என்றவாறு வெளியே வந்தான் சிவசாமி. வெளிச்சத்தில் கிழவனைக் கண்டதும் ''யாரு தாத்தாவா....? வாங்க'' என்றான்.

''லைட்டா வாங்கி இருக்கே?...''

''ஆமா தாத்தா.....''

''அடி சவாசு....''



''ரொம்ப நாளா ஓர் ஆசை, இப்ப தான் வாங்க முடிஞ்சது. வாங்கிப் போட்டேன்...'' என்றான் சிவசாமி. குரலில் பெருமிதம் தொனித்தது.

காஸ் லைட் கிழவனைக் காந்தமாக இழுத்தது. உள்ளே போய் நெற்றியில் இடிப்பது போல் தொங்கிக் கொண்டிருந்த லைட்டை விழிகள் மின்ன மெள்ளத் தொட்டான். அது லேசாக ஆடியது.

''ஐயய்யோ ஆட்டாதே தாத்தா 'மெண்டலு' கொட்டிப் போகும்'' என்று கூக்குரலிட்டான். "யார் ராது? .. " என்று



இலவச விநியோகத்திற்காக

திரும்பிய கிழவன் பையனின் விழிகளில் தெரிந்த பரபரப்பை ரசித்தவாறு ‘‘அடேங்கப்பா, பெரிய இவுக’’ என்று அவனை நோக்கி நாக்கைத் துருத்தியவாறு கையை ஓங்கினான். வீட்டுக்குள்ளிருந்த குஞ்சு குளுவான் எல்லாம் ‘‘கொல்’’ லென்று சிரித்தன. கிழவனும் பல்லில்லாத முரசு தெரியச் சிரித்தான். குழந்தையினது போல அந்தச் சிரிப்பு மோகனமாக இருந்தது.

ஒளியில் திளைத்த அந்த அறையை சுற்று முற்றும பார்த்து விட்டு மீண்டும் லைட்டை ஏறிட்டுப் பார்த்தான். வெள்ளி மாதிரி மின்னிய லைட்டின் கீழ்ப்பகுதியில் அவன் முகம் நீளவாட்டாக நீண்டு விகாரமாக பிரதிபலித்தது. ‘இது எம்புட்டு செவசாமி?’ என்றான்.

‘‘வெலை தானே?.... அது தலையை தின்னுருச்சு... நூத்தி இருவது ரூவா’ என்றான் சிவசாமி. கிழவனுக்கு அது ஒரு பெரிய தொகை தான். ஆனாலும் அது ஒரு பொருட்டாகவே படவில்லை. ‘எம்புட்டுக் குடுத்தாத்தான் என்ன?... சீதேவியே வீட்டுக்குள்ள வந்த மாதிரி இருக்கு’ என்று உள்ளே பார்த்தவாறு ‘நம்ம லயம் இப்ப எப்படி இருக்கு தெரியும்ல ஒம்பது கெழவிக நடுவே கொமரிப் பொண்ணு ஒருத்தி இருக்கிற மாதிரி இருக்கு ஒன் வீடு.’ என்று கூறிச் சிரித்தவாறு நடந்தான்.

கிழவன் தன் வீட்டுக்குள் நுழைந்த போது அவன் கண்களில் முதல் பட்டது அழுது வடிந்து பொண்டிருந்த தகரலாம்புதான். விரல் நீளத்துக்கு சுடரும். முழ நீளத்துக்கு புகையுமாக எரியும் அந்தவிளக்கு வெளிச்சத்தில் தான் இவ்வளவு கால வாழ்க்கையும் ஓட்டியிருக்கிறது என்பதை இப்போது நினைக்கும் போது, நம்ப முடியாத அதிசயமாகப்பட்டது. இதே சமயத்தில் எஞ்சியிருக்கும் சொற்ப காலத்தை இதே வெளிச்சத்தில் கழிக்கப் போவதும் சகிக்க முடியாத கொடுமையாகப்பட்டது.

உள்ளே சாப்பாட்டுக்கடை நடந்து கொண்டிருந்தது. நான்கு பிள்ளைகளுக்குத் தகப்பனாகி விட்ட கிழவனின் மகன் வேலு, சிறிதும் பெரிதுமான பேரப்பிள்ளைகள் எல்லோரும் கோப்பையை வழித்துக் கொண்டிருந்தார்கள். கிழவனைக் கண்டதும் அவனுடைய வெண்கலக் கும்பாவை எடுத்துக் கழுவினாள் கிழவனின் மருமகள். ‘ஆம் ஆத்தா எனக்கும் என்னாவது கஞ்சித் தண்ணி தா...’ என்றவாறு தலை முண்டாசை எடுத்து உதறி, அதைக் கையோடு தரையையும தட்டி விட்டு உட்கார்ந்தான்.

மருமகள் கொண்டு வந்த சோற்றைப் பிசைந்து உருட்டி உருட்டி பொந்துக்குள் கூழாங்கற்கள் வீசுவது பேல வாய்க்குள் போட்டுக் குதப்பும் போது தாடையும் மீசையும் ஒழுங்கு இல்லாமல் நெளிந்து வளைந்தன.

சாப்பாட்டுக்கிடையில் ‘செவசாமி லைட்டு வாங்கியிருக்கான்’ என்று கூறினான். அவன் சொல்லித்தான் அவர்களுக்குத் தெரிய வேண்டுமென்பதில்லை. ஆயினும் அந்த ஆனந்தத்தை தனக்கே மீண்டும் ஞாபகப்படுத்திக் கொள்வது போலக் கூறினான். வாய் நிறைந்த சோற்றுடன் ‘உம்’ மென்று முனகிக் கொண்டான் வேலு. ‘லைட்டு போட்டப்பிறகு எப்படி இருக்குங்கிறே.... அடடா.... சீதேவி வெளையாடுது, என்று பரவசமாகக் கூறிய கிழவன், சற்று நேரம் அந்தப் பரவசத்திலேயே லயித்து வெளித்தவாறு இருந்து விட்டுச் ‘செலவோடு செலவாக நமக்கும் ஒன்னு வாங்கிப்புடு வேலு... நல்லாயிருக்கும்’ என்றான்.

வேலு சட்டென்று தலையைத் தூக்கி மனைவியைப் பார்த்து விட்டு, கிழவனைத் திரும்பிப் பார்த்தான். அவன் முகத்தில் தெரிந்த ஏளனத்தைக் கண்டு கிழவன் தலையைக் குனிந்துகொண்டான். அதுவரை இருந்த சகஜ நிலை மாறி ஒரு அசாதாரண மௌனத்தை உணர்ந்த கிழவன், தான் ஏதும் உளறி விட்டோமோ என்ற எண்ணிக் கொண்டான்.

‘லைட்டா.. ஹும்.... அது மட்டும் தான் நமக்குக் குறைச்சல்’ என்று எரிச்சலாகச் சிரித்த வேலு, ‘செவசாமி லைட்டு வாங்குறான்னா அவனவன் என்னத்தையோ பண்ணி வாங்குகிறான். நாம எங்கே போறது?’ என்றான். சிவசாமிக்கு சாராய பிஸ்னஸ் உண்டு. ஒளிவு மறைவாகத்தான். கிழவனுக்கும் அது தெரியும். எப்போதாவது வசதிப்படும் போது இரண்டு ரூபாய்க்கு ஊற்றிக் கொண்டு ‘என்னலே காட்டமாவே இல்லை...’ என்று உள்ளங்கையால் மீசையை ஒதுக்கிக்கொள்வான்.

வேலுவின் பதில் நியாயந்தான். ஆனாலும் கிழவனுக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது. ‘முடியாட்டி என்ன பண்றது.... வாங்கினா நல்லா இருக்குமேன்னு சொன்னேன். அம்புட்டுத்தான்...’ என்றான். குரல் ரொம்பவும் இறங்கிப் போயிருந்தது.

‘அம்மான் சொல்லுறதும் நெசந்தான். வெளிச்சம் இருக்கிற இடத்திலே தான் லெச்சுமி இருப்பா....’ என்றாள் கிழவனின் மருமகள், கிழவனின் மனம் புண்படாமல் இருக்க ஐஸ். யாரு இல்லேங்கிறா? நெசந்தான். இந்த வீட்டிலே சம்பாதிக்கிற நீ.... நானு, ஒம்மகன் மூணு பேருட்டு சம்பளம் அப்பாவுட்டுப் “பென்சன்’ காசுந்தான் மாசத்தை ஓட்டவே என்னைப்புடி உன்னைப்புடிங்குது. அதுவும் சின்னவுக.. இப்பெல்லாம் காசைக் கண்ணுலேயும் காட்டுறாக இல்லை என்றவாறு கிழவன் பக்கம் திரும்பி ‘ஒங்க பேரப்புள்ளே ரெண்டு மாசமா ஒத்தைச் சதங்கூட வீட்டுச்செலவுக்கு குடுக்கிறதில்லை...’ என்றான்.

சாப்பிட்டு முடிந்து திண்ணையில் கால் மேல் கால் போட்டவாறு கிழவன் வெற்றிலை இடித்துக் கொண்டிருந்த போது அவனுடைய பேரன் வெளியே இருந்து உள்ளே வந்தான். அவனோட குப்பென்று பீடி மணமும் வந்தது. கறுத்த ஒல்லியான உடம்பை மேலும் ஒல்லியாக்கிக் காட்டும் கையில்லாத பெரிய பனியனும் கணக்காலுக்கு மேல் கெண்டைச் சதைவரை இறங்கியிருந்த சாரமும் அணிந்து சிறுவனுமில்லாமல் வாலிபனாகவுமில்லாத இரண்டுங் கெட்டான் பருவம். அவனைக் கண்டதும் ‘ஏலே நில்லு’ என்றான் கிழவன். ‘என்னலே ஙொப்பன் என்னமோ புகாரு பண்றான்.

‘என்னவாம்?’

‘வீட்டுச் செலவுக்கு ஒத்தைச் சதங்கூடக் குடுக்கிறது இல்லியாம்?...’

‘அதெல்லாம் ரெண்டு மூணு மாசத்துக்கு யாரும் சல்லிப் பேச்சுப் பேசப்படாது...’

‘அடி ஆத்தே! என்ன விசயம்?”

‘நான் கைக்கு உருலோசு ஒண்ணு வாங்கப் போறேன் என்றவாறு உள்ளே நுழைந்து படுக்கையைச் சுருட்டிக் கொண்டு வெளியே வந்தான்.

‘எலே நேரா நேரத்துக்கு மட்டும் திங்கிறியே... சல்லி குடுக்க வாணாமா..? என்றான் கிழவன்.

‘அதான் என்னோட கூப்பன் அரிசி, மாவு எல்லாம் வருதே, அப்புறம் என்ன..?, என்றவாறு இரண்டு வீடுகள் தள்ளி இருக்கும் நண்பனோடு படுத்துக் கொள்ள சென்றுவிட்டான். எரிச்சலோடு ‘ஆங்’ என்று அவன் போன திசையைப் பார்த்தவாறு ‘என்னா அடக்க ஒடுக்கம் ... முருகம் .. முருகம்’ என்று முனகியவாறு வெற்றிலையை இடிக்கத் தொடங்கினான்.

∴ ∴ ∴ ∴

மறுநாள் மாலை .....

சிவசாமியின் வீட்டின் முன்னால் அந்த லயத்துப் பிள்ளைகளின் பட்டாளமே குழுமியிருந்தது. எல்லோருக்கும் தலைமை வகிப்பது போல கிழவன் திண்ணையில் அமர்ந்திருந்தான். எதிர் திண்ணையில் சிவசாமி அமர்ந்து லைட்டைத் துப்பரவு செய்து கொண்டிருந்தான். கிரீடம் மாதிரி மேலே இருந்த மூடியைத் திறந்து உள்பகுதியை பைப் வளையங்களில் மெண்டல் இடிபட்டு பஸ்பமாகி விடாமல் ஜாக்கிரதையாக எழுந்து உள்ளே வாயால் ஒரு ஊது ஊதினான். பின்னர் அவைகளை மீண்டும் பொருத்தி உள்ளே இருந்த கிண்ணத்தில் ஸ்பிரிட்டை ஊற்றி தீப்பற்ற வைத்தான்.

சற்றுச் சூடேறியதும் காற்றடிக்கும் பம்பை இழுத்திழுத்து அமுக்கும் போது சத்தம் 'விக் விக்' என்று உச்சஸ்தாயியை நோக்கி ஏறியதை கிழவன் ரசித்தவாறு 'வெள்ளைக்காரன் வெள்ளைக்காரன் தான்டா.. காத்தைப் புடிக்கமுடியுமா?... சட்டியிலே அடைக்க முடியுமா...? அடைச்சுப்புட்டான் பாரேன்' என்று வியந்து கொண்டிருந்தான். சிவசாமி மேல்பகுதியை தொட்டுப் பார்த்துவிட்டு வளையத்தை முன்புறம் பின்புறமாகத் திருகினான் அதுவரை அழுக்கு மஞ்சள் நிறத்தில் எரிந்து கொண்டிருந்த சுடரை 'டப்டப்பென்று அடித்துக் கொண்டு, குபீரென்று குளுமையான வெள்ளி ஒளி பரவியது. குழந்தைகளும் கிழவனும் காரணமில்லாமல் படபடவென்று கைதட்டினார்கள். 'செத்தவனைத்தான் பொழைக்க வைக்கமுடியுதில்லே, என்னென்ன வேலை பாரு?.. என்றவாறு எழுந்தான் கிழவன். எப்பாடுபட்டேனும் தங்களுக்கும் ஒரு லைட் வாங்கிவிட வேண்டுமென்ற உறு அவன் மனதில் பிறந்தது. லைட் வாங்குவதென்றால் யாரை நம்பியும் பயனில்லை. தன்கையே தனக்குத் துணையென்று எண்ணிக் கொண்டு காய்கறித் தோட்டத்திற்குள் இறங்கினான். தோட்டமென்றால் அது ஒன்றும் பெரிய சேனையில்லை. சரிவான பூமியில் பிறந்த மண் மேடு மாதிரி ஏழெட்டுப் பாத்திகள். ஆகக் கீழ்ப்பாத்தியின் ஓரமாக வேலியைத் தொட்டுக் கொண்டிருக்கும் இரண்டு வாழைமரங்கள். இன்னோரிடத்தில் அவரைச்செடி ஒன்று, ஆதரவுக்காக நடப்பட்டிருந்த மர அலம்பலில் தாறுமாறாகப் பின்னிக் கிடந்தது. ஒரு பாத்தியில் வெங்காயச் செடிகள் நுனியில் மஞ்சள் பூத்து புல்களுக்கு மத்தியில் தலை நீட்டிக் கொண்டிருந்தன. மற்றும் படி ஒரே புற்காடு.

தனி மனிதன் ஒருவன் முழு நேரம் பாடுபட்டால் மாதம் ஐம்பது ரூபா காணலாம் என்று நம்பிக்கையோடு 'அப்பனே சம்முகா' என்று முனகிக் கொண்டு மண்வெட்டியை ஓங்கி ஓங்கிப் போட்டான்.

∵ ∵ ∵ ∵

இப்போதெல்லாம் பொழுது விடிந்தால் கிழவனுக்கு காய்கறித் தோட்டத்துக்குள் தான் வேலை. ஒளியைத் தேடும் வேட்கையில் அவனுக்குள் அசுர வெறியே ஏற்பட்டிருந்தது.காடாக மண்டிப் போயிருந்த புல் பூண்டுகளை அழித்து பாத்தி பிடித்து பளீரென கேழ்வரகுப் பிட்டுப் போல கருமண் ஜொலிக்க இரண்டு வாரகாலத்துக்குள் அற்புதத்தையே விளைவித்திருந்தான். மேலே இருந்த இரண்டு பாத்திகளில் பத்து நாளைய போஞ்சிக் கன்றுகள் மண்ணைப் பொத்துக்கொண்டு குஞ்சு இலைகளும் பிளந்த விதையுமாக நின்றன.

'தாத்தா' என்ற குரல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தான். மேலே ஓரமாக சிவசாமியின் தலைமட்டும் வேலிக்கம்பில் வெட்டிச் சொருகியது மாதிரி தெரிந்தது.

'என்ன தோட்ட வேலையா?

'ஆமா' பல்லில்லாத முரசு தெரியச் சிரித்து விட்டு தலைத்துண்டை எடுத்து முகத்தைத் துடைத்து விட்டு கச கசத்த மார்பையும் துடைத்துக் கொண்டான் கிழவன்.

`ஒரு அஞ்சாறு பாத்தி தக்காளி போடுங்க, அப்பத்தான் காசைப் பார்க்கலாம்` என்றான் சிவசாமி.

இன்னும் பயிரிடப்படாத வெற்றுப் பாத்திகளைப் பார்த்து விட்டு `பாப்பம்` என்று தலையை ஆட்டிக் கொண்டான். சிவசாமியின் யோசனை உருப்படியான யோசனையாகத் தான் பட்டது.

மழை பெய்யும் போலிருந்தது. டப்டப்பென்று மழைத் துளிகள் கையிலும் முதுகிலும் விழத்துவங்கின. மேலே அண்ணாந்து பார்த்தான், சூல்கொண்ட கருமேகக் கூட்டம் பரவி வந்து கொண்டிருந்தது. துளிதுளியாக விழ ஆரம்பித்த மழை சரம் சரமாக இறங்கத் துவங்கியவுடன் கிழவன் மண்வெட்டியை தோளில் வைத்தவாறு தோட்டத்தை விட்டு வெளியே வந்தான். கையோடு பீலியடிக்குப் போய் கை, கால்களை கழுவிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்த போது கூரைத் தகரத்தின் மீது கணகணவென்று பேரிரைச்சலோடு மழை கடுமையாகப் பெய்யத் தொடங்கியது. கிழவன் வேறு உடை அணிந்து கொண்டு சிவப்பு கரை போட்ட கறுப்புப் போர்வை ஒன்றைப் போர்த்தியவாறு திண்ணையில் வந்து உட்கார்ந்தான். மழையில் நனைந்து கொண்டிருந்த வெளி உலகம் வாசல் வழியாக மங்கிய ஓவியம் போல் தெரிந்தது.

கிழவன் தோட்டத்தை நினைத்துக் கொண்டான். பூமி நன்றாக குளிர்ந்து விடும். இன்னும் சில தினங்களுக்கு தண்ணீர் போடவேண்டிய அவசியம் இராது. இல்லாவிட்டால் அது வேறு சிரமம். பீலியடியிலிருந்து தண்ணீர் கொண்டு போவது அதுவும் பத்துக் குடித்தனங்களுக்கு மத்தியில் என்பது பிரச்சினை அல்ல. சாதனை வேலுவே ஒருநாள் சலித்துக் கொண்டான். கிழவனோடு சேர்ந்து கொண்டு அவனுடைய சிறுசுகள் செம்பிலும் குடத்திலும் தண்ணீர் கொண்டு போவதைப் பார்த்து விட்டு ``இஞ்சே, ஒங்களுக்கெல்லாம் என்ன புடிச்சிருக்கு?'' என்று பல்லைக் கடித்தவாறு தோட்டத்துக்குள் எட்டிப் பார்த்து விட்டு 'ம்க்கும்' என்று வெறுத்துச் சலித்துக் கொண்டான். தோட்ட வேலையால் அவனுக்கு ஏதும் நஷ்டமில்லை `லைட் லைட்` என்று சாவது தான் அவனுக்கும் பிடிக்கவில்லை. ஆனால் சில தினங்களிலேயே அவனும் தோட்டத்தைப் பற்றி அக்கறை காட்டத் தொடங்கினான்.

கிழவனின் மருமகளின் கைங்கரியம் அது.

``ஒங்களுக்குத்தான் வாங்கிக் குடுக்க முடியல்ல, கஷ்டப்பட்டு நாலு காசு சேத்து வாங்குறவுக வாங்கட்டுமே....'' என்று அவள் சொன்னது அவனுக்கு நியாயமாகப்பட்டிருக்க வேண்டும். இப்போதெல்லாம் குடும்பத்தின் அன்றாடப் பேச்சுக்களில் தோட்டத்தைப் பற்றியும் சில பேச்சுக்கள் இடம் பெறுவதும், எல்லோரும் அக்கறை காட்டத் துவங்கி இருந்ததும் கிழவனுக்கு ஆறுதலாகவும் தெம்பாகவும் இருந்தது.

ஏழு எட்டு வருடங்களுக்கு முன்பு என்றிருந்தால் நிலைமையே வேறு ....

தை, மாசி மாதங்களில் கொழுந்துக் காலம் ஆரம்பித்து விட்டால் கிழவனும் அந்தத் தோட்டத்திலே வேகமாக கொழுந்து எடுப்பதில் தேர்ந்தவர்களான இன்னும் சில ஆண்களும் அனுமதி கேட்டுக்கொண்டு கொழுந்து வேலைக்குச் செல்வார்கள். மூன்று மாதங்களில் யாரும் எடுக்காத சம்பளம் வாங்கிக்கொண்டு வருவார்கள். அந்தக் காலத்தில் இந்த ஆசை வந்திருந்தால் ஒரே மாதத்திலேயே வீட்டில் லைட் தொங்கி இருக்கும்.

கிழவன் பெருமூச்சு விட்டுக்கொண்டான். ஒருமுறை தோட்டத்திலேயே அதிக சம்பளத்தையும் பாராட்டாக பத்து ரூபாயும் பெற்றுக் கொண்டு வந்த அன்று இறந்து போன அவன் மனைவி `திட்டி` சுற்றிப் போட்டது ஞாபகம் வந்தது.... தனது ஓங்கார இரைச்சலோடு மழை பொழிந்து கொண்டிருந்தது.

விடியற் காலையில் கிழவனுக்கு விழிப்புக் கண்டபோது அப்போது தான் படுத்து உடனே கண் விழித்தோமா என்று ஒருகணம் எண்ணிக் கொண்டான். இரவு பெய்த கடுமை சற்றும் குறையாமல் அதே இரைச்சலோடு பெய்து கொண்டிருந்தது. கிழவன் எழுந்து உட்கார்ந்தான். சற்று நேரத்தில் 'மஸ்டருக்'காக மணி அடிக்கும் சத்தம் கேட்டது. கொஞ்சம் நேரம் தொடர்ந்த அந்த மணிச் சத்தம் நிறுத்தப்பட்டு சில வினாடிகளுக்குப் பிறகு மீண்டும் ஒலிக்கத் துவங்கிய போது கிழவன் கிடந்த அறையின் உட்பறம் நோக்கி ''இன்னைக்கி வேலே இல்லே போலேருக்கு....''

குளிருக்காக அடுப்பருகில் உட்கார்ந்திருந்த வேலு ''இந்த மழையிலே எப்படித்தான் போறது?'' என்றான். ''அநியாயம், ஒருநாள் சம்பளம் போச்சு'' என்ற சலித்துக் கொண்டாள் கிழவனின் மருமகள்.

வாசல் புறம் ஏதோ சத்தம் கேட்டது. கிழவன் எட்டிப் பார்த்தான். படிகளின் அருகில் குடையோடு நின்ற ஒருவன் ஏதோ சத்தம் போட்டுச் சொல்லிக் கொண்டிருந்தான்.

கிழவன் கையை ஆட்டி ''என்னதுலே'' என்ற இரைந்து கேட்டான். குடையோடு நின்றவன் வாசல் அருகில் வந்து ''ராத்திரி மழையிலே நம்ம தோட்டம் பூரா அப்பிடியே கீழே எறங்கிட்டுது'' என்றான்.

''என்னது...'' என்ற கிழவன் ஒரு கணம் பொறி கலங்கி நின்றான். மறுகணம் கையில் கிடைத்த குடை ஒன்றைப் பிடித்துக் கொண்டு படிகள் வழியாக கீழே இறங்கினான். ஏற்கனவே வேறு சிலரும் இறங்கி நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். கிழவனும் அவர்கள் மத்தியில் போய் நின்று தோட்டத்தைப் பார்த்தான். அந்த லயத்து குடும்பங்களுக்கு தோட்டமாகப் பிரித்துக் கொடுத்திருந்த நீண்ட பூமி இடித்துத் தள்ளியது போல சரிந்து கீழே இறங்கி ஒற்றையடிப் பாதையை மூடி, அதற்குக் கீழே உள்ள தேயிலை நிரைகளுக்குள்ளும் பாய்ந்திருந்தது. கிழவனுக்கு நெஞ்சு தீப்பற்றி எரிவது போல இருந்தது. தனது கடைசி நம்பிக்கையான அந்த தோட்டத்தின் மண் குவியலைப் பார்த்து தளர்ந்து போய் படிகளில் ஏறி வந்து திண்ணையில் அமர்ந்தான். வாசல் அருகில் நின்றுகொண்டிருந்த அவனது மருமகள் அவனைக் கண்டதும் ஒதுங்கி உள்ளறையில் நிலை அருகில் போய் நின்ற கொண்டாள். கிழவன் பின்னாலேயே வந்து கொண்டிருந்த வேலு திண்ணை அருகில் வந்து, தலையிலிருந்த துணியால் கைகளையும் முகத்தையும் துடைத்தவாறு ''ஒண்ணுகூட மிஞ்சல்லே. அப்படியே எறங்கிட்டுது'' என்றான். ''ஐயய்யோ'' என்று நெஞ்சில் கையை வைத்த கிழவனின் மருமகள் ''அம்மான் ஆசையோடு பாடுபட்டாங்களே.... போச்சே....'' என்று அங்கலாய்த்துக் கொண்டாள்.

வேலு திரும்பி கிழவனைப் பார்த்தான். மகத்தான ஏமாற்றத்தால் தொங்கிப் போன முகத்தோடு வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் கிழவன்.

மழை தொடர்ந்து பெய்து கொண்டே இருந்தது.

*என். எஸ். எம். ராமையா*
*'ஒரு கூடைக்கொழுந்து'*



இலவச விநியோகத்திற்காக